# வள்ளுவத்தில் மனித உரிமைகள்

ஜெ.நிர்மலாதேவி

**முன்னுரை:** ‘மனித உரிமை’ என்ற சொல் மகத்துவமானது. இனம், மொழி, மதம், நாடு என்ற வேறுபாடில்லாமல் மனிதனை அவன் மனிதனாகப் பிறந்த காரணத்தாலேயே நேசிக்கத் தூண்டுவது; சக மனிதனின் உயிருக்கும் உணர்வுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்ற நன்னெறியைக் கற்றுத் தருவது; சுயநலப் போக்கால் பிறனொருவனை வஞ்சித்து அவனுடைய உழைப்பையும் பொருளாதாரத்தையும் சுரண்டாமல் எல்லோரும் சமமாக வாழ வழிகாட்டுவது.

இலக்கியமென்பது மனித வாழ்விற்கு அப்பாற்பட்டதல்ல; மனிதனை, அவனுடைய உணர்வுகளை நுணுகி ஆராய்ந்தெடுத்துரைப்பதோடு மட்டுமல்லாமல் அவன் கடைபிடிக்க வேண்டிய நன்மதிப்புகளையும் கற்றுத் தருவது. அவ்விலக்கியங்களுள்ளும் மனிதனை நல்வழிப்படுத்தும் பணியில் அறநூல்கள் முன்னிலை வகிக்கின்றன. அவ்வற நூல்களுள் முதலிடம் வகிப்பது திருக்குறள். இனம், மொழி, மதம், நாடு என்ற எல்லைகளைக் கடந்து உலக மக்கள் அனைவருக்கும் வாழ்வியல் மதிப்புகளைப் போதிப்பது அது. வள்ளுவத்தில் அன்றைய முடியாட்சிக்குக் கூறப்பட்ட பல அறக் கருத்துக்கள் இன்றைய குடியாட்சிக்கும் பயன்படுவனாவய் அமைந்துள்ளன. அறங்கள் மனித உரிமைச் சிந்தனைகள் திருக்குறளில் இடம்பெற்றுள்ளன. அக்கருத்துக்களை இக்கட்டுரை விதந்துரைக்கின்றது.

**மனிதஉரிமைகள்:** “ஒருவன் மனிதனாக இருப்பதனாலேயே அவனுக்குள்ள இயற்கையான உரிமைகள் மனித உரிமைகளாகும்.” எல்லா மனிதர்களுக்கும் அவ்வுரிமைகள் பொதுவானவையே என்று மிகப் பொதுவாகச் சொல்வர். “மனித சமுதாக வளர்ச்சியில், சட்டம் மனிதர்களது எந்த நலனை ஏற்றுப் பாதுகாக்கிறதோ, அந்த நலன்கள் உரிமைகள் ஆவதில்லை” என்கிறார் மா. சண்முக சுப்பிரமணியம். “வாழ்வுரிமை (Righ to life); பாதுகாப்பு (Security); தனிப்படச் சொத்து வைத்திருக்க உரிமை (Right to personal property); சட்டத்தின் ஆட்சி (Rule of law); சிந்தனை உரிமை; சங்கம் சேர உரிமை; எங்கும் விருப்பம் போல் சென்றுவர உரிமை… என்பதான பல்வேறு பரந்துபட்ட உரிமைகள், ‘மனித உரிமை’ எனக் குறிப்பிடப்படுவதற்குள் பொதிந்துள்ளன. மனித உரிமைகளைக் குடியிரிமை, அரசியல் உரிமைகள் (Civil & Political Rights) என ஒரு தொகுப்பாகவும், பொருளாதார, சமூகப் பண்பாட்டுரிமைகள் (Economic, Scoial and Cultural Rights) எனப் பிறிதொரு தொகுப்பாகவும் இருவகைப்படுத்திப் பார்க்கும் வழக்கம் அண்மையில் ஏற்பட்டுள்ளது. குடியுரிமைத் தொகுப்பில், வாழ்வுரிமை; நாட்டின் உரிமை (Right to Nationality); சட்டத்தின்முன் சமன்மை (Equality before Law); சிந்தனை; பேச்சுரிமைகள், தேர்தலில், அரசியலமைப்புகளில் பங்கேற்க உரிமைகள் போன்றவையும், பொருளதாரச் சமூகத் தொகுப்பில், உணவு (Right to Food), உடை, உறையுள் (Righ to Shelter), வாழ்க்கைத் தகுநிலை (Standard of Living), வேலைக்குரிமை (Right to work), கல்வியுரிமை (Right to Education), கலாச்சாரப் பண்பாட்டு நிகழ்வுகளில் பங்கேற்பு ஆகிய பிறவும் அடங்கும்.

தற்காலத்தில் மனித உரிமை என்பது அரசின்மேல் அல்லது அரசுக்கு எதிராக தனிமனிதனால் எழுப்பப்படும் கேட்புகள் என்றே கருதவேண்டம். பிறர் எவரும் மற்றவருடைய மனித உரிமைகளை மீறாமலிருக்கும் நிலையை உறுதிப்படுத்துவதும் அரசின் கடமையாகும். ஆதலால்தான் அரசின் மேல் இக்கேட்புகள் எழுகின்றன. பாலின வேறுபாடின்றி உலகின் அனைத்து ஆண் பெண்களுக்கும் உள்ள உரிமைகள் மனித உரிமைகள் ஆகும். ஒருவரது பிறப்பு, நாடு, சாதி, சமயம், சொத்து, நிறம் ஆகிய எதனாலும் வேறுபடுத்திப் பார்க்க முடியாதன அவ்வுரிகைள் என்பர்.”[3]

இனி திருக்குறளில் இடம்பெற்றுள்ள மனித உரிமைச் சிந்தனைகள் குறித்துக் காணலாம்.

**வாழ்வுரிமை:** மனிதனின் வாழ்வுரிமை குறித்து வள்ளுவத்தில் பொருட்பால் பல இடங்களில் எடுத்துரைக்கின்றது. "வாழ்வுரிமை என்பது உயிரோடிருக்க உரிமை (Right to Life) என்று மட்டுமல்ல, வாழ்க்கையின் தரநிலை (Equality) நன்முறையில் அமையத் தேவையான உரிமை என்றும் பொருள் கொள்ளப்பட வேண்டும். வாழ்க்கைத்தரம், சுகாதாரமான சூழல்கள், வேலை செய்யுமிடங்களில் தூய்மை, தக்க ஓய்வு ஆகியனவும் வாழ்க்கையின் தகுதிநிலைக் கூறுகளாகும்."[4]

*"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேராது இயல்வது நாடு"* *(குறள் : 734)*

ஒவ்வொரு மனிதனும், பசி, பிணி, பகையின்றி வாழ்வதற்கு உரிமையுள்ளது என்றும் அம்மூன்றிலிருந்தும் தம் குடிமக்களைக் காப்பது அரசனின் கடமையென்றும் வள்ளுவம் அறுதியிட்டுக் கூறுகிறது. பொருள் வருவாய்களை மேன்மேலும் பெருக்கவும், வந்த பொருள்களை ஓரிடத்துச் சேர்க்கவும், சேர்த்தவைகளைப் பிறர் கவராமல் காக்கவும், காத்தவற்றை அறம், பொருள், இன்ப வழிகளில் செலவிடப் பகுக்கவும் வல்லவனே சிறந்த அரசன்.

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு."* *(குறள் : 385)*

அத்தகைய அரசனின் கீழ் வாழும் குடிமக்கள் அச்சமும் கவலையுமின்றி இனிதிருப்பர்; அவர்களுடைய வாழ்க்கைத்தரம் நன்றாக இருக்கும். இந்த வாழ்வுரிமை அவ்வரசனின். கீழ் வாழும் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு என்ற அரிய உண்மையைப் புலப்படுத்துகிறார்.

**பிறப்பால் சமமே:** "எல்லா மனிதர்களும் உள்ளார்ந்த சுதந்திரத்தோடும், மாண்போடும், உரிமைகளோடும், சமத்துவத்தோடும் பிறக்கிறார்கள். அவர்கள் பகுத்தறிவும், மனசாட்சியும் வாய்க்கப் பெற்றவர்கள். எனவே ஒருவரோடு ஒருவர் சகோதர உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்"[5] என்ற சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தின் முதல் பிரிவின் கூற்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே.

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்".* *(குறள் : 972)*

என்று ஒலித்திருப்பதைக் காணமுடிகின்றது.

வள்ளுவர் வாழ்ந்த காலத்தில், சமுதாயத்தை மனுதர்மத்தின்படி அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்று நான்கு வருணங்களாகப் பிரித்து அதற்கேற்ப உரிமைகளைப் பகுத்திருந்தனர். வருண அடிப்படையிலான அச்சமுதாயத்தின் கடைக்கோடியில் வைக்கப்பட்டு எல்லா உரிமைகளையும் இழந்திருக்க, ஒரு சிலர் மேல்தட்டுச் சமுதாயத்தில் பிறந்துவிட்ட காரணத்தாலேயெ உழைப்பின்றி எல்லாவிதமாக சுகபோகங்களையும் அனுபவித்து வந்தனர். ஆனால் இது தவறு. பிறப்பினால் யாரும் வேறுபடுவதில்லை. உழைப்புதான் உயர்வு தரும் என்று அறிவுறுத்தும் வள்ளுவர் இழிதொழிலாகக் கருதப்பட்ட வேளாண்மைக்குச் சிறப்பு தந்து உழவு என்று ஓர் அதிகாரமே படைத்துள்ளார்.

*"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்*
*உழன்றும் உழவே தலை."* *(குறள் :1031)*

என்று உழவுத் தொழிலுக்கு முதன்மையிடம் கொடுக்கும் வள்ளுவர்,

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்."* *(குறள் : 1031)*

என்று உழவர்களைச் சிறப்பிப்பதுடன், பிறப்பினால் மனிதர்களை வேறுபடுத்தும் மனுதர்மத்திற்குச் சவுக்கடி கொடுக்கிறார் எனலாம்.

**வறுமையற்ற சமுதாயம்:**

*"தனியொ ருவக் குணவில்லை யெனில்*
*ஜகத்தினை யழித்திடுவோம்."*[6]

என்ற முண்டாசுக் கவிஞரின் சீற்றத்தினை, ஆவேசக் குரலினை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாம் வள்ளுவத்திலும் காண முடிகின்றது.

*"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகுஇயற்றி யான்"* *(குறள் : 1062)*

திருவள்ளுவர் வாழ்ந்த சமுதாயம் தனிவுடைமைச் சமுதாயம். அச்சமுதாயத்தில் ஏற்றமும் இறக்கமும் வளமும் வறுமையும் இருப்பது இயல்பே. வறுமையின் கோரப்பிடியால் பசியும் அதன் விளைவால் இரவும் இருந்துள்ளது. சமுதாயத்தின் இச்சீர்கேட்டினையெண்ணி உள்ளங் கொதித்த வள்ளுவர், நல்குரவு, இரவு, இரவச்சம் ஆகிய அதிகாரங்களைப் படைத்துள்ளார்.

ஒரு பிரிவினர் வளமாக வாழும்போது மற்றொரு பிரிவினர் பிச்சைக்காரர்களாக வாழ்வது இயல்பு என்றும் அதற்க்குக் காரணம் கடவுள், ஊழ்வினை, விதி என்றும் ஏதேதோ காரணங்களைப் படைத்துப் பிதற்றுகின்றனர் இம்மானிடர். ஆனால் இச்சமுதாயத்தில் மக்கள் பிச்சைக்காரர்களாக வாழ்வதற்குக் காரணம் அந்தக் கடவுள் என்றால் அவன் இவ்வுலகிற்குத் தேவையேயில்லை; அழிந்தொழியட்டும் என்று சாடுகிறார். இதன்மூலம் மக்கள் சமுதாயத்தில் எல்லோரும் எல்லாரும் பெற்றுச் சமமாக வாழும் உரிமையுள்ளது என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

பொருளாதார ஏற்றத்தாழ்வு, அதன்பொருட்டு ஏற்படும் வறுமை, அதன்பொருட்டு ஏற்படும் இரப்பு ஆகியவை எத்தனை கொடுமையானவை? அவையில்லாமல் இருப்பதே மனித சமுதாயத்தை உயர்த்தும் என்ற கருத்தை வள்ளுவரின் தார்மீகக் கோபத்தின்மூலம் உணர முடிகின்றது.

**பொருளாதார உரிமை :** பொருள் தேடும் உரிமை யாவருக்கும் உண்டு எனத் தெளிவுறுத்தும் பொதுமறை, அத்தேடுதல் அறவழிலேயே இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றது.

*"அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்*
*பிற்பயக்கும் நற்பா லைவ"* *(குறள் : 659)*

எல்லோருக்கும் பொருளாதார உரிமை உண்டுதான். அதற்காக அடுத்தவனுடைய உரிமையை மீறலாமா? பிறனொருவனை வஞ்சித்து அவனை அழவைத்துப் பொருள் சேர்ப்பது தர்மமா? இல்லையே.

*"சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்*
*கலத்துள் நீர்பெய்திர்இ யற்று"* *(குறள் : 660)*

*"ஈன்றாள்பசி காண்பான் ஆயினும் செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை."* *(குறள் : 656)*

அறமற்ற வழயில் வஞ்சனையான விதத்தில் சூதும் வாதும் செய்து அநியாத்தால் பொருள் சேர்க்கக்கூடாது. அவ்வழியல் பொருள் சேர்த்துக் காப்பாற்றுதல் பச்சை மண்கலத்துள் நீரைப் பெய்து அதைக் காப்பாற்றி வைத்தல் போன்றது. யாவும் கரைந்து வெறுங்கையாய்ப் போய்விடும் என்று பொருளீட்டும் முறை குறித்துப் பேசுவதன் மூலம் சுரண்டலற்ற சமுதாயத்திற்குப் பாதை சமைத்துக் கொடுக்கிறார் எனலாம்.

**சித்திரவதை:** "யாரையும் சித்திரவதை செய்யக் கூடாது; கொடூரமாக மனிதத் தன்மையற்றுக் கேவலமாக நடத்தக் கூடாது. கொடூரமாக மனிதத் தன்மையற்ற கேவலமான தண்டனைக்கு ஆட்படுத்தக் கூடாது"[7] என்று உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 5வது பிரிவு கூறுகின்றது.

அரசு தன்கீழ் வாழும் குடிமக்களைக் கண்ணோட்டமின்றி வருத்தக் கூடாது. குடிமக்கள் ஆற்றாது அழுத கண்ணீரே கொடுங்கோல் அரசைத் தேய்க்கும் படையாக அமைந்துவிடும். அதனால் அரசன் நேர்மையான முறையில் தன் குடிகளை ஆட்சி செய்ய வேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கிறார் வள்ளுவர்.

*"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே*
*செல்வத்தைத் தேய்க்கும் படை."* *(குறள் : 555)*

அன்று முடியாட்சிக்கு அவர் விடுத்த இவ்வெச்சரிக்கை, இன்றைய குடியாட்சிக்கும் பொருந்தும். வல்லான் வகுத்ததே நீதி என்று மனம்போன போக்கில் ஆட்சியாளர்கள் ஆளும்போது அவர்கள் அழிந்தொழிவது திண்ணம். கூர்ந்துநோக்கின், தனி மனித வாழ்விலும் பிறனொருவனை வஞ்சித்து அழச் செய்தால் அவனுடைய கண்ணீர் வஞ்சித்தவனை வீழ்த்திவிடும் என்ற உண்மை புலப்படுகிறது.

**நீதி பெறும் உரிமை** : “சட்டத்தின் முன் அனைவரும் சமம்; அனைவரும் சட்டப்படி சமமான பாதுகாப்புரிமையுடையவர்; எவ்வகையான பாகுபாடும் காட்டப்படாமல் சமமாக நடத்தப்பட மனிதர்க்கு உரிமையுண்டு. அடிப்படை உரிமைகள் சட்டப்படி அளிக்கப்படவும் அவை மீறப்படும் நிகழ்வுகளில் தகுதி வாய்ந்த நீதி அமைப்புகளின் மூலம் தீர்வுகள் பெறும் உரிமையும் ஒவ்வொருவருக்கும் உண்டு”[8] என்று உலக மனித உரிகைள் பிரகடனத்தின் 7,8 ஆம் பிரிவுகள் அறிவிக்கின்றன.

தவறிழைத்த தன் மகனையே தேர்க்காலில் கொன்று பசுவிற்கும் நீதி வழங்கிய மன்னன் வாழ்ந்த மண் இது; ஆராயாமல் தவறாக நீதி வழங்கியதை உணர்ந்தவுடனேயே, ‘யானோ அரசன்; யானே கள்வன்’ என்று உயிர்விட்ட மன்னன் வாழ்ந்த மாநிலம் இது. இப்படிப்பட்ட மன்னர்களே இறவா வரம்பெற்று இன்றும் மக்கள் மனதில் நிலைத்திருக்கிறார்கள். அதனால்தான்,

*“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறையென்று வைக்கப் படும்”* *(குறள் : 388)*

என்கின்றார் வள்ளுவர். இங்கு தனக்கிழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துக் குரல் கொடுக்கவும், நீதியைப் பெறவும் ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமையுண்டு. அந்த உரிமையை நிலைநாட்டுவது அரசனின் கடமை என்று வலியுறுத்துகிறார். மன்னன் மட்டுமல்லாது குடிமக்களும்கூட நடுவுநிலைமை தவறாது வாழ வேண்டும் என்பதனை அறத்துப்பாலில் நடுவுநிலைமை என்னும் அதிகாரத்தின்மூலம் தெளிவுபடுத்துகிறார் எனலாம்.

**கல்வியுரிமை:** மனிதன் அறிவுடனும் ஆற்றலுடனும் வாழக் கல்வி தேவை. கல்வி நலன் அனைவரிடமும் ஏற்படுமானால் உயர் எண்ணங்கள் தோன்றும். கல்வியால் உள்ளத்தில் நல்லியல்பு தோன்றும். கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. அதனால் கல்வி கட்டாயமாக்கப்படுதல் வேண்டும். கல்வி கற்றலின் இன்றியமையாமையை ஓர் அதிகாரம் முழுவதும் விதந்துரைக்கும் வள்ளுவர், கல்லாததனால் வரும் கேடுகளையும் மற்றோர் அதிகாரத்தில் எடுத்தோதுகிறார். வருணாசிரம தருமத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கும் வள்ளுவம், கல்வியை இன்னாருக்குத் தான் உரியது என்று வரையறுக்காமல் எல்லோருக்கும் பொதுவுடையாக்குகிறது.

*“யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்*
*சாந்துணையும் கல்லாத வாறு”.* *(குறள் : 397)*

என்று ஏக்குறும் வள்ளுவர்.

*“கற்றிலன் ஆயினும் கேட்க அ்ஃதுஒருவற்கு*
*ஒற்கத்தின் ஊற்றாம் துணை”* *(குறள் : 414)*

என்று அறிவுறுத்துகிறார். கேடில் விழுச்செல்வம் கல்வி அனைவருக்கும் உரியது; ஒருவன் எப்பாடு பட்டாவது கல்விச் செல்வத்தைப் பெற வேண்டும் என்ற விழுமிய சிந்தனையை நாம் வள்ளுவத்தில் காண முடிகின்றது.

**உணர்வுகளைக் காயப்படுத்தாதீர்** : மனிதனை அவனுடைய உள்ளார்ந்த உணர்வுகளோடு மதிப்பதே மனித உரிமை. கடுஞ்சொற்களினால் சக மனிதனின் உணர்வுகளைக் காயப்படுத்துவது கூட மனித உரிமை மீறல்தான் என்னும் கருத்தினை ‘இனியவை கூறல்’ என்னும் அதிகாரம் தெளிவுறுத்துகின்றது.

*“இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ*
*வன்சொல் வழங்கு வது”* *(குறள் : 99)*

பிறர் கூறும் இன்சொல் தனக்கு இன்பம் தருவதைக் காண்கின்றவன், தன் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றவன், தான் மட்டும் பிறரிடம் வன்சொல் கூறி அவர்கள் மனதைக் காயப்படுத்துதல் முறையாகுமா என்ற கேள்வியை எழுப்புகின்றார் வள்ளுவர்.

**பேச்சுரிமை** : தனது எண்ணங்களை எடுத்துரைக்கும் பேச்சுரிமை மனிதனுக்கில்லையெனில், அவன் வேறு எத்தனை உரிமைகளைப் பெற்றிருந்தாலும் அவை பயனற்றவையே. மனிதனுக்குச் சொல்லுரிமை இருக்கின்றது என்று கூறும் வள்ளுவம் அந்தத் திறமையை வளர்த்துக் கொள்ளவும் அறிவுறுத்துகின்றது.

*“சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை*

*வெல்லும்சொல் இன்மை அறிந்து."* (குறள் : 645)

*"சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது."* (குறள் : 647)

**தன்னுரிமை :** மனிதன் தன்னளவிலும் கூட ஆவி, ஆன்மா, சரீரம் ஆகியவற்றைக் கெடுக்கக் கூடாது என்பது தன்னுரிமை.

*"தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்*
*தன்நெஞ்சே தன்னைச் சுடும்."*

*"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்*
*நஞ்சுண்டார் கள்உண் பவர்."*

*"பகைபாவாம் அச்சம் பழிஎன நான்கும்*
*இகவாவாம் இல்இறப்பான் கண்."*

என்று 'வாய்மை', 'கள்ளுண்ணாமை', 'பிறன் இல் விழையாமை' போன்ற அதிகாரங்களின் மூலம் இவ்வுண்மையை நிலைநாட்டுகிறார் வள்ளுவர்.

**மனிதனின் கடமைகள் :** பிறர் நலனைப் பேணுவதற்காக, பிறர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கெனச் சட்டம், நாம் எதைச் செய்ய வேண்டும் என்று விதிக்கின்றதோ, அதைச் செய்தலும், நாம் எதைச் செய்தல் தகாது என்று தடுக்கின்றதோ அதைச் செய்யாதிருத்தலும் சட்டப்படியான நமது கடமை ஆகின்றது. உரிமையும் கடமையும் நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை. கடமையை ஒழுங்காகச் செய்யும்போது உரிமை இயல்பாகவே கிடைத்துவிடும் என்று வள்ளுவம் அறுதியிடுகின்றது.

தனிமனிதன், சமூகம், அரசு என மூன்றும் சிறப்பாக அமைந்தால் தன்னிறைவு பெற்ற உரிமை உரிமைமிக்கதாக ஒரு நாடு விளங்க முடியும். தன்னுடைய கடமைகளைச் செவ்வனே செய்யும்போது உரிமை தானே கிடைக்கும் என்பதற்கு

*"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்*
*மடிதற்குத் தான் முந்துறும்"* (குறள் : 1023)

என்னும் திருக்குறளே சான்றாக அமைகின்றது.

**முடிவுரை :** மனித உரிமைச் சிந்தனைகள் இந்த நூற்றாண்டில் தான் உலகெங்கிலும் பரவிய ஒரு துறையாக உள்ளது. எனினும் இது முற்றிலும் புதியதொரு துறையல்ல. பழங்காலந்தொட்டே இலக்கியங்களில் மனித உரிமைக் குரல்கள் ஏதோ ஒரு வடிவத்தில் ஒலித்துக் கொண்டிருப்பததைக் காண முடிகின்றது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்த திருக்குறளில் மனித உரிமைச் சிந்தனைகள் அறத்தின் வாயிலாகப் புலப்படுத்தப்படுகின்றன. அதற்குக் காரணம், பல தவறுகள், கொடுமைகள், வன்முறைகள், போர்கள் இவற்றினால் மனித உரிமைகள் பாதிக்கப்பட்டுக் கடைநிலைக்கு வந்துவிட்ட காலகட்டத்தில் அதற்கான தீர்வுகளையும், களைகள் குறைந்த சமுதயாத்தை உருவாக்கும் பணியையும், மனிதநேனய அடிப்படையில் ஒருவரையொருவர் மதிக்கும் மீட்டுருவாக்கப் பண்பாட்டினையும் ஆழ்ந்து சிந்தித்த வள்ளுவர் அறத்தின் மூலமே இதனைச் செயல்படுத்த முடியுமென்று ஆத்மார்த்தமாக எண்ணியிருக்க வேண்டும்.

வரலாற்றுப் பின்புல அழுத்தம், ஒவ்வொரு ஆட்சிக் காலத்திலும் உரிமைகளைச் செறிவாகவும் நெகிழ்வாகவும் மாற்றியும் புதுமைப்படுத்தியும் வந்துள்ளது. மன்னராட்சிகளின் எல்லைக்கோடுகள் நெகிழ்வற்றவை. இருபதாம் நூற்றாண்டின் குடியாட்சி முறை நெகிழ்வுடையது. இதில் மக்களே பெரும்பங்கு வகிப்பதால், மக்களால் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அரசு, சட்டம், உரிமை ஒருங்கிணைப்பு வேண்டுமென்ற நிலை இன்று நிலைபெற்றிருக்கின்றது. இத்தகைய காலகட்டத்தில் வள்ளுவர் கூறியது அறமா? உரிமையா? என்ற வினா எழுவது இயல்பு. அறம் என்பது ஒரு தொகுதிச் சொல்லாதலின் அதனுள் பிறர் உரிமையை மதித்தலும் அடங்கும். எனவே உரிமைகளின் அடித்தளமான அறம் அதனை வலிமையாகக் காலம் கடந்தும் உணர்த்த முடியும் என்பதால் அறத்தின் வழி உரிமை வள்ளுவர் குரலாக அமைந்துள்ளதை மேற்கூறிய கருத்துக்கள் உணர்த்துகின்றன எனலாம்.

**குறிப்புகள் :**

1. Jack Donnely & Rhoda Howard, Ed., International Handbook of Human Rights, Green Wood Press, London 1987 (‘Human Rights are, by definition, the rights one has simpy because one is a human being’) P.1.
2. மா. சண்முகசுப்பிரமணியம், சட்டத்தமிழ், கழக வெளியீடு, 1969, ப.28
3. இராஜ முத்திருளாண்டி, மனித உரிமைகள், சூர்யா பதிப்பகம், 1996, பக்.3-5
4. மேலது., ப.24,
5. சு.பொ. அகத்தியலிங்கம், மனித உரிமைகள்: வரலாறும் அரசியலும், தமிழ்ப் புத்தகாலயம், 2001, ப.105
6. பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகவும், 2000, ப. 150.
7. சு.பொ. அகத்தியலிங்கம், மேலது., ப.106.
8. இராஜ முத்திருளாண்டி, மேலது., ப.118.